வகுப்பு : 9

தேர்வு எண் | | | | | | |

# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2022-23

நேரம் : 3.00 மணி]

## தமிழ்

[மொத்த மதிப்பெண்கள் : 100

பகுதி - I (மதிப்பெண்கள்:15)

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 15X1=15

1. தமிழ்விடு தூது ---- என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது.
(அ) தொடர்நிலைச் செய்யுள் (ஆ) புதுக்கவிதை (இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்
2. 'மல்லல்' மூதூர் வயவேந்தே – கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?
(அ) மறுமை (ஆ) பூவரசு மரம் (இ) வளம் ஈ) பெரிய
3. முறையான தொடர் அமைப்பினைக் குறிப்பிடுக.
(அ) தமிழர்களின் வீரவிளையாட்டு தொன்மையான ஏறுதழுவுதல்
(ஆ) தமிழர்களின் வீர விளையாட்டு ஏறுதவுழுதல் தொன்மையான
(இ) தொன்மையான வீரவிளையாட்டு தமிழர்களின் ஏறுதழுவுதல்
ஈ) தமிழர்களின் தொன்மையான வீரவிளையாட்டு ஏறுதழுவுதல்
4. தமிழ்நாடு அரசு கிராமப்புற மாணவர்களுக்கு நடத்தும் திறனாய்வுத் தேர்வு எது?
(அ) தேசிய திறனறித் தேர்வு (ஆ) ஊரகத் திறனறித் தேர்வு
(இ) தேசிய திறனறி, கல்வி உதவித் தொகைத் தேர்வு ஈ) மூன்றும் சரி
5. காலம் பிறக்கும்முன் பிறந்தது தமிழே – எந்தக்
காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே! – இவ்வடிகளில் பயின்று வரும் நயங்கள்
(அ) முரண், எதுகை, இரட்டைத் தொடை (ஆ) இயைபு, அளபெடை, செந்தொடை
(இ) மோனை, எதுகை, இயைபு (ஈ) மோனை, முரண், அந்தாதி
6. நீர் நிலைகளோடு தொடர்பில்லாதது எது?
அ) அகழி ஆ) ஆறு இ) இலஞ்சி ஈ) புலரி
7. பொருத்தமான வினையை எடுத்து எழுதுக.
கதிர் அலுவலகத்திலிருந்து விரைவாக -----
அவன் பையன் பள்ளியிலிருந்து இன்னும் -----
அ) வந்தான், வருகிறான் ஈ) வந்துவிட்டான், வரவில்லை
இ) வந்தான், வருவான் ஈ) வருவான், வரமாட்டான்
8. ஐம்பெருங்குழு, எண்பேராயம் – சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்
அ) திசைச்சொற்கள் ஆ) வடசொற்கள் இ) உரிச்சொற்கள் ஈ) தொகைச் சொற்கள்
9. ஒரு சொல்லால் தொடரின் இரு இடங்களை நிரப்புக. எண்ணெய் ஊற்றி ---- விளக்கு ஏற்றியவுடன், இடத்தை விட்டு ------
அ) விலங்கு ஆ) எழுதி இ) அகல் ஈ) கால்
10. 'இந்திய ஏவுகணை நாயகன்' என்று போற்றப்பட்டவர்
அ) டாக்டர் அப்துல்கலாம் ஆ) சிவன் இ) விக்ரம் சாராபாய் ஈ) மயில்சாமி அண்ணாதுரை
11. பகுபத உறுப்புகள் ஆறு வகைப்படும், ஆறு என்பதன் தமிழ் எண் ----
அ) க ஆ) சா இ) ங ஈ) ௬

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளி. (12,13,14,15)

"நீர்இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே!
உண்டி முதற்றே உணவின் பிண்டம்!
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே;"

12. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?
அ) பெரியபுராணம் ஆ) புறநானூறு இ) மணிமேகலை ஈ) உயிர்வகை



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

13. இப்பாடலின் ஆசிரியர் யார்?

அ) குடபுலவியனார் ஆ) சேக்கிழார் இ) தொல்காப்பியர் ஈ) சீத்தலைச் சாத்தனார்

14. 'யாக்கை' என்ற சொல்லின் பொருள் ------

அ) கண் ஆ) உடம்பு இ) கை ஈ) கால்

15. இப்பாடலில் இடம்பெற்றுள்ள அடி எதுகைச் சொற்களை எடுத்து எழுதுக.

அ) நீர்இன்று, உண்டி ஆ) உண்டி, உண்டி இ) உண்டி, உயிர் ஈ) உணவெனப், நிலத்தொடு

**பகுதி – II (மதிப்பெண்கள்:18) பிரிவு – 1**

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண் 21-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** 4X2=8

16. கண்ணி என்பதன் விளக்கம் யாது?

17. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே – குறிப்புத் தருக.

18. நீங்கள் வாழும் பகுதியில் ஏறுதழுவுதல் எவ்வாறெல்லாம் அழைக்கப்படுகிறது?

19. இணைய வழியில் இயங்கும் மின்னணு இயந்திரங்கள் எவையேனும் ஐந்தினைக் குறிப்பிடுக.

20. நிலம் போல யாரிடம் பொறுமை காக்க வேண்டும்?

21. 'மிகுதியான்......' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

**பிரிவு – 2**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 5X2=10

22. வீணையோடு வந்தாள், கிளியே பேசு – தொடரின் வகையைச் சுட்டுக.

23. தொடரைப் பழமொழி கொண்டு நிறைவு செய்க.

அ) இளமையில் கல்வி ----- ஆ) சித்திரமும் கைப்பழக்கம் -----

24. பிழை நீக்கி எழுதுக.

அ) சர் ஆர்தர் காட்டன் கல்லணையின் கட்டுமான உத்தி கொண்டு தான் தௌலீஸ்வரம் அணையைக் கட்டியது

ஆ) மழையே பயிர்க்கூட்டமும் உயிர்க்கூட்டமும் வாழப் பெருந்துணை புரிகின்றன.

25. பொருள் எழுதித் தொடரமைக்க.

கரை, கறை

26. கலைச்சொற்கள் தருக.

அ) Download ஆ) Herostone

27. அடைப்புக்குள் உள்ள சொற்களைப் பொருத்தமான வினைமுற்றாக மாற்றுக.

அ) இந்திய மொழிகளின் மூலமும் வேருமாகத் தமிழ் ---- (திகழ்)

ஆ) குழந்தைகள் அனைவரும் சுற்றுலா ---- (செல்)

28. பகுபத உறுப்பிலக்கணம் தருக. விரித்த

**பகுதி – III (மதிப்பெண்கள்:18) பிரிவு – 1**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** 2X3=6

29. மூன்று என்னும் எண்ணுப்பெயர் பிற திராவிட மொழிகளில் எவ்வாறு இடம் பெற்றுள்ளது?

30. பள்ளி மாணவர்களுக்கான தமிழக அரசின் இணையவழிச் சேவைகளை எழுதுக.

31. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

மனித வாழ்வின் அடிப்படைத் தேவைகள் உணவு, உடை, உறைவிடம். இவற்றுள் முதலிரண்டும் வேளாண்மையை ஆதாரமாகக் கொண்டவை. வேளாண்மையோ நீரை அடிப்படையாகக் கொண்டது. மழைநீர், ஆற்றுநீர், ஊற்று நீர் ஆகியவற்றைச் சிறிய, பெரிய நீர்நிலைகளில் சேகரிக்க வேண்டும்.

அ) மனித வாழ்வின் அடிப்படைத் தேவைகள் யாவை?

ஆ) வேளாண்மை எதனை அடிப்படையாகக் கொண்டது?

இ) நீர் நிலைகளில் எவற்றைச் சேகரிக்க வேண்டும்?

**பிரிவு – 2**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** 2X3=6

32. பட்டமரத்தின் வருத்தங்கள் யாவை?

33. அறிவையும், உயிரினங்களையும் தொல்காப்பியர் எவ்வாறு தொடர்புபடுத்துகிறார்?



www.Padasalai.Net

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

34.'தித்திக்கும்.....' எனத் தொடங்கும் தமிழ்விடு தூது பாடலை முதல் நான்கு வரிகள் மட்டும் அடிமாறாமல் எழுதுக.

(அல்லது)

'காடெல்லாம்.......' எனத் தொடங்கும் பெரியபுராணம் பாடலை அடிமாறாமல் எழுதுக.

பிரிவு – 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** 2X3=6

35. தன்வினை, பிறவினை – எடுத்துக்காட்டுகளுடன் வேறுபடுத்திக் காட்டுக.

36. பொருத்தமான துணைவினைகளைப் பயன்படுத்துக.

அ) மனிதனையும் விலங்குகளையும் (வேறு) ---- மொழியாகும்.

ஆ) திராவிட மொழிகள், சில, பொதுப்பண்புகளைப் (பெறு) -----

இ) காலந்தோறும் தன்னைப் (புதுப்பித்து) ---- மொழி தமிழ்.

37. வல்லினம் மிகும் இடங்கள் எவையேனும் மூன்றினை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

பகுதி – IV (மதிப்பெண்கள்:25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 5X5=25

38. அ) தூது அனுப்பத் தமிழே சிறந்தது என்பதற்குத் தமிழ்விடு தூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக.

(அல்லது)


ஆ) அடுத்த தலைமுறைக்கும் தண்ணீர் தேவை – அதற்கு நாம் செய்ய வேண்டியவற்றை எழுதுக.

39. அ) உங்களின் நண்பர், பிறந்த நாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ். இராகிருஷ்ணனின், 'கால் முளைத்த கதைகள்' என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக.

(அல்லது)

ஆ) சுற்றுச்சூழலைப் பேணிக்காக்கும் பள்ளிகளின் வரிசையில் மாவட்டத்திலேயே சிறந்ததாக உங்கள் பள்ளி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அதனைக் கொண்டாடும் விழாவில் கலந்து கொள்ளும் மாவட்டக் கல்வி அலுவலருக்கு வரவேற்பு மடல் ஒன்றை எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41. அ) நயம் பாராட்டுக.

கல்லும் மலையும் குதித்துவந்தேன் – பெருங்
காடும் செடியும் கடந்துவந்தேன்;
எல்லை விரிந்த சமவெளி – எங்கும் நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்துவந்தேன்.
ஏறாத மேடுகள் ஏறிவந்தேன் – பல
ஏரி குளங்கள் நிரப்பிவந்தேன்;
ஊறாத ஊற்றிலும் உட்புகுந்தேன் – மணல்
ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன்.

–கவிமணி

(அல்லது)



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

ஆ) பொருத்தமான பெயரடைகளை எழுதுக. (நல்ல, பெரிய, இனிய, கொடிய)

அ) எல்லோருக்கும் ------ வணக்கம்.

ஆ) அவன் ------ நண்பனாக இருக்கிறான்.

இ) ------ ஓவியமாக வரைந்து வா.

ஈ) ------ விலங்கிடம் பழகாதே.

42. அ) பொன்மொழிகளை மொழிபெயர்க்க.

1. A Nation's culture resides in the hearts and in the soul of its people - **Mahatma Gandhi.**
2. The art of People is a ture mirror to their minds - **Jawarharlal Nehru.**
3. The biggest Problem is the lack of Love and Charity - **Mother Teresa.**
4. You have to dream before your dreams can come true - **A.P.J.Abdul Kalam**
5. Winners don't do different things; they do things differently - **Shiv Khera.**

(அல்லது)

ஆ) உன் பெற்றோர் மகிழுமாறு நீ செய்ய வேண்டியவை யாவை?

குறிப்பு : **செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்றுவினா. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

இங்கிலாந்தைச் சேர்ந்த மைக்கேல் ஆல்ட்ரிச் 1979 – இல் இணைய வணிகத்தைக் கண்டுபிடித்தார். 1989 –இல் அமெரிக்காவில் இணையவழி மளிகைக் கடை தொடங்கப்பட்டது. இருந்த இடத்திலிருந்தே பயணச்சீட்டு எடுப்பதை எளிதாக்கிய மிகப் பெரிய இந்திய நிறுவனம் இந்தியத் தொடர்வண்டி உணவு வழங்கல் மற்றும் சுற்றுலாக்கழகம். 2002 ஆம் ஆண்டு இணையவழிப்பதிவு அறிமுகப்படுத்தப்பட்ட போது சராசரியாக ஒரு நாளைக்கு 29 பயணச்சீட்டுகள் இணையவழியே பதிவு செய்யப்பட்டன. ஆனால் 13 ஆண்டுகள் கழித்து 2015 ஏப்ரல் 1 அன்று ஒரே நாளில் 13 இலட்சம் பயணச்சீட்டுகள் பதிவு செய்யப்பட்டது ஒரு சாதனை.

1. இணைய வணிகத்தைக் கண்டுபிடித்தவர் யார்?
2. இணையவழி மளிகைக்கடை எங்கு தொடங்கப்பட்டது?
3. இருந்த இடத்திலிருந்தே பயணச்சீட்டு எடுப்பதை எளிதாக்கிய மிகப்பெரிய இந்திய நிறுவனம் எது?
4. 2015 ஏப்ரல் 1 அன்று இணையவழியே பதிவு செய்யப்பட்ட பயணச்சீட்டுகள் எண்ணிக்கை எவ்வளவு?
5. இப்பத்திக்கேற்ற தலைப்பு ஒன்றினைத் தருக.

## பகுதி – V

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்.** 3X8=24

43. அ) பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

ஆ) ஏறுதழுவுதல் தமிழரின் அறச்செயல் என்று போற்றப்படுவதற்கான காரணங்களை விவரிக்க.

44. அ) 'தண்ணீர்' கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக.

(அல்லது)

ஆ) இந்திய விண்வெளித்துறை பற்றிய செய்திகளை விவரி.

45. அ) 'தமிழ்மொழியின் சிறப்புகள்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

(அல்லது)

ஆ) 'மழைநீர் சேகரிப்பு' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593